இவற்றின் எண்ணிக்கை 3819 ஆகும்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்றால் என்ன?

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது ஒரு மொத்த வியாபார அங்காடியாகும். இதில் வியாபார நடவடிக்கைகள் மாநில அரசால் நியமிக்கப்பட்ட சந்தைக்குழு (Market Committee) மூலம் நெறிமுறைப்படுத்தப் பட்டுக் கட்டுப்பாடு செய்யப்படுகின்றன. இச்சந்தைக் குழுவில் வியாபாரிகளின் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பர். இங்கே எல்லா வியாபார நடவடிக்கைகளும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே நடத்தப்பட வேண்டும். முறையற்ற, ஒழுங்கீனமான எந்த நடவடிக்கைக்கும் இங்கே இடம் கிடையாது. மேலும், ஏதேனும் தகராறு ஏற்பட்டால் மத்யஸ்தம் செய்து வைக்கவும் மத்தியஸ்த ஏற்பாடுகள் உள்ளது.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் நோக்கங்கள்

1. உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்தல்.
2. உற்பத்தியாளர் பெறும் விலைக்கும், நுகர்பவர் செலுத்தும் விலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கணிசமாகக் குறைத்தல்.
3. போக்குவரத்து, தகவல் தொடர்பு, சரக்குச் சேமிப்பு முதலிய வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.
4. உற்பத்திப் பொருள்களை உடனடியாக ரொக்கத்துக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்து தருதல்.
5. சுதந்தரமான போட்டிக்கு வழி ஏற்படுத்துதல்.
6. உற்பத்தியாளர்களிடம் பேரம் பேசும் திறனை (Bargaining Power) வலிமையடையச் செய்தல்.
7. விற்பனை செய்வதில் ஏற்படும் தகராறுகளை மத்தியஸ்தம் செய்து வைத்தல்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் சிறப்பம்சங்கள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென்று சில சிறப்பியல்புகள் உண்டு. அவையாவன.

*1.* **சந்தைக்குழு (Market Committee) :** ஒவ்வொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும் ஒரு சந்தைக் குழு அமைக்கப்பட வேண்டும். இக்கமிட்டியில் வணிகர்கள், சமூக அமைப்புகள், அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். இதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டும். இக்கமிட்டிக்குச் சில உரிமைகளும் (Rights) அதிகாரங்களும் (Powers) உண்டு. விற்பனைக்

...த்தின் சட்ட திட்டங்களுக்கு மாறாக நடப்பவர்களைத் தண்டிக்கவும், ...ராதம் விதிக்கவும் கமிட்டிக்கு உரிமை உண்டு.

2. **செயல் படும் பரப்பு (Area of Operation) :** ஒவ்வொரு ஒழுங்கு ...ற விற்பனைக் கூடத்திற்கும் அதன் செயல்படும் பரப்பு நிர்ணயிக்கப் ...ட்டுள்ளது. இப்பரப்பின் எல்லைகள் அரசு இதழ்களில் பெரும்பாலும் ...றிப்பிடப்பட்டு இருக்கும். பெரும்பாலும் முனிசிபல் எல்லைகள் இதன் ...லைகளாக இருக்கின்றன.

3. **விற்பனை முறை (Method of Sale) :** ஒழுங்குமுறை விற்பனைக் ...டங்களில் பகிரங்க ஏல முறையே (Open Auction System) அங்கீகரிக்கப் ...ட்டுள்ளது. எனவே, தனியே இரகசியமாகப் பேசவும், சங்கேத ...மொழிகள், ஜாடைகள் மூலம் பேரம் பேசவும் இங்கே வழி இல்லை.

4. **லைசென்ஸ் பெற்று இயங்குதல் :** இவ்வொழுங்குமுறை விற்ப... கூடங்களில் இயங்குபவர்கள் அத்தனை பேரும் வியாபாரிகள், ...கர்கள் முதல் எடை பார்ப்பவர்கள் (Weighman) வரை அத்தனை ...ரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்றே பணியாற்ற ...வேண்டும். இவ்வுரிமம் பெறுவதற்காக ஒரு கட்டணம் வசூலிக்கப்படு...கிறது. தரகர்களுக்குத் தரவேண்டிய கமிஷன், மற்ற கட்டணங்கள் ...அனைத்தும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

5. **சந்தைக் கட்டணம் (Market Levies) :** இங்கே விற்பவர் வாங்கு...பவர் ஆகிய இருவருமே ஒரு சிறிய தொகையை லெவியாகச் செலுத்த ...வேண்டும். வியாபாரம் செய்யப்படும் அளவு அல்லது தொகைக்கு லெவி ...நிர்ணயிக்கப்படும். இக்கட்டணமே விற்பனைக் கூடத்தின் முக்கிய வரு...மானமாகும். இது தவிர லைசென்ஸ் கட்டணம், அபராதம் ஆகியவையும் ...தின் இதர வருவாய் வழிகளாகும்.

6. **தகராறுகளை தீர்த்து வைத்தல் (Settlement of Disputes) :** வாங்கு...வோர் விற்போரிடையே எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கவும் மத்தி...யஸ்த கமிட்டி உள்ளது. இக்கமிட்டியின் முடிவே இறுதியானது. இதன் ...முடிவுகளுக்குச் சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது தரப்பினர் இருவரும் ...கட்டுப்பட வேண்டும்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யும் முறை

பெரும்பாலான ஒழுங்குமுறைக் கூடங்களில் பொது ஏல முறையே பின்பற்றப்படுகின்றது. சிலவற்றில் மூடப்பட்ட டெண்டர் முறையும் (Closed Tender System) பின்பற்றப்படுகின்றது.

விவசாயிகள் இரவு பகல் எந்த நேரத்திலும் தமது விளை பொருள் ...களை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கலாம். ஆனால் வியாபாரம் மட்டும் சில குறிப்பிட்ட நாட்களில் மட்டும் சில குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே நடைபெறும். விவசாயி விளை பொருள்களைக் கொண்டு வந்து ஒப்பித்தவுடன், அதனை மார்க்கட் கமிட்டி தன் பொறுப்...பில் ஏற்றுக் கொள்ளும். ஒப்படைக்கப்பட்ட விளை பொருள்கள் ...மூட்டைகளில் இருந்து அவிழ்த்துக் கொட்டப்பட்டு, நன்றாகக் கலக்கப்...படுகின்றன. பின்னர் ஒரே அளவான சரக்குப் பைகளில் கட்டப்பட்டு எடை போடப்படுகின்றன. எடை போடுபவர் (Weighman) எடை போடப்பட்ட பொருள்களின் எடையை அதற்குரிய ஒரு சீட்டில் குறித்து விளை பொருளின் உரிமையாளரிடம் ஒப்படைப்பார்.

பின்னர் ஒவ்வொரு விவசாயியும் கொண்டு வந்த பொருள்கள் த
தனிக்குவியலாக வைக்கப்பட்டு, ஒவ்வொரு குவியலுக்கும் ஒரு எ
தரப்படுகின்றது. வாங்க விரும்புபவர்கள் இக்குவியல்களை நேரில் ப
ரையிடவும் இயலும். கொள்முதல் செய்ய விரும்புபவர்கள் ஏல வி
குறிப்புச் சீட்டில் (Bid Slip) தாம் வாங்க விரும்பும் குவியல் எண், த
தயாராக உள்ள தொகை முதலியவற்றைக் குறித்து இதற்காக உள்ள
பெட்டியில் போட்டுவிட வேண்டும். பின்னர் இப்பெட்டி திறக்கப்
டுச் சீட்டுகள் வெளியே எடுக்கப்பட்டு ஒவ்வொரு குவியலுக்கும்
அதிக விலை ஏலம் கேட்டிருக்கின்றாரோ அவருக்கு விளை பொ
விற்கப்பட்டதாக அறிவிக்கப்படும். விற்பனை செய்யும் முன்னர் உற்
தியாளரின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்படும்.